**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி. R.சுஜாதா, B.Sc., L.L.M.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2024 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12 ஆம் நாள் திங்கள்கிழமை</u>

**<u>அ.வ.எண். 246/2019</u>**

திருமலைசாமி, த/பெ. வெங்கிடுசாமி (எ) வெங்கிடுபதி, சுமார் 63 வயது, இந்து, வசிப்பிட முகவரி எண். 1/99, கோமங்கலம், பொள்ளாச்சி தாலுகா.

... வாதி

/ எதிர் /

1) திரு. வெங்கடேஷ், த/பெ. கிருஷ்ணசாமி, ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி , சுமார் 35 வயது, இந்து, வசிப்பிட முகவரி நாயக்கர் ஹவுஸ், வீர கேரளம், கோயம்புத்தூர்.

2)திருமதி. ராஜாமணி (எ) சின்னகன்னு, க/பெ. தனசேகர், சுமார் 50 வயது, இந்து, வசிப்பிட முகவரி கோமங்கலம், பொள்ளாச்சி தாலுகா.

3) திரு. தனசேகர் , சுமார் வயது 55, இந்து, வசிப்பிட முகவரி கோமங்கலம், பொள்ளாச்சி தாலுகா.

... **பிரதிவாதிகள்**

வாதியின் சுவாதீனத்தில் உள்ள தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, உள்ளீட்டார்களோ எவ்வகையிலும், எவ்வித இடையூறும் செய்யவோ கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத்தொகை கோரியும் மற்றும் இன்னபிற பரிகாரங்கள் இருப்பின் அதனையும் இந்த வாதிகளுக்கு வழங்கிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII விதி

1 ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 22.08.2019

தாவா வியாஜ்ஜிய மூல நாள் 29.06.2018 மற்றும் 18.08.2019 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம் கிராமத்தில் ஆரம்பம்.

தாவா மதிப்பு ரூ. 1000/- மற்றும் இதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் ரூ. 30/- தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 27(சி)-ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

## DETAILS OF VALUATION

The notional value of the suit property
for the relief claimed Rs. 1, 000.00/-
Court fee paid U/s. 27(c) Rs.30.00/-

இவ்வழக்கானது கடந்த 22.08.2019 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 24.09.2019 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 16.07.2024 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.P.சண்முகம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் தீர்ப்பாணை :-

1. முடிவில், வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதியின் சுவாதீனத்தில் உள்ள தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, உள்ளீட்டார்களோ எவ்வகையிலும், எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. செலவுத்தொகை இல்லை.

## MEMO OF COST LIST

| **For Plaintiff's side** | | | | **for Defendants' side** |
|---|---|---|---|---|
| **Stamp for Plaint** | **:** | **Rs.** | **30.00** | **(not filed)** |
| **Stamp for vakalath** | **:** | **Rs.** | **10.00** | |
| **Stamp for batta** | **:** | **Rs.** | **205.00** | |
| **Senior Advocate fees** | **:** | **Rs.** | **250.00** | |
| **Junior Advocate Fees** | **:** | **Rs.** | **83.00** | |
| **Total:** | | **Rs.** | **578.00** | |

(Plaintiff's side cost list filed and recorded)

## DESCRIPTION OF PROPERTY

திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோமங்கலம கிராமம், க. ச. 411/ A 1 நெ. நத்தம் ஊர்க்கட்டில் ஓர் பகுதி (புதிய புல எண். 564/6 – ல் ஓர் பகுதி) 169 சதுரமீட்டர் இடத்துக்கு செக்குபந்தியும் அளவுகளும்,

| | |
|---|---|
| புதிய புல எண். 564/5 – ன் படி உள்ள ஜோதி நாயக்கர் வீட்டு இடத்துக்கும் | - கிழக்கு |
| புதிய புல எண். 564/8 – ன் படி உள்ள கிழமேல் தடத்துக்கும் மற்றும் புதிய புல எண். 564/6 ன் படி உள்ள இடத்தில் நம்மளுடைய மீதி இடத்துக்கும் | - மேற்கு |
| புதிய புல எண்.564/1 – ன் படி உள்ள கிழமேல் பொது வண்டித்தடத்துக்கும் | - தெற்கு |
| புதிய புல எண். 564/8 – ன் படி உள்ள கிழமேல் வீதிக்கும் | - வடக்கு |

இதன் மத்தியில்,

| | |
|---|---|
| தென்மேற்கு மூலையிலிருந்து கிழபுரமாக கிழமேல் மீட்டர் | 08.2 |
| அதன் கிழகோட்டிலிருந்து வடபுரமாக தென் வடல் மீட்டர் | 02.2 |
| அதன் வடகோட்டிலிருந்து கிழபுரமாக கிழமேல் மீட்டர் | 06.6 |
| அதன் கிழகோட்டிலிருந்து வடபுரமாக தென் வடல் மீட்டர் | 12.0 |
| அதன் வடகோட்டிலிருந்து மேல்புரமாக தென் சாயலாக கிழமேல் மீட்டர் | 07.6 |
| அதன் மேல் கோட்டிலிருந்து மேல்புரமாக கிழமேல் மீட்டர் | 06.0 |
| அதன் மேல்கோட்டிலிருந்து தென்புரமாக ஆரம்பித்த தென்மேற்கு மூலை வரை தென்வடல் மீட்டர் | 13.8 |

இந்த அளவுகள் கொண்ட 169 சதுர மீட்டர் உள்ள இடமும் மேற்படி இடத்துக்குண்டான மாமூல் தடபாத்தியமும் சகிதம்.

ஆக மேற்கண்ட சொத்தும் மேற்கண்ட சொத்துக்கு சகல முன் ரிக்கார்டுகளின்படியும் மற்றும் மாமூல்படியும் உண்டான சகலவிதமான பாத்தியங்களும் சகிதம்.

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**<u>தீர்ப்பாணை</u>**
அ.வ.எண்.246/2019
நாள்.12.08.2024.
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---